Sri MANAKULA VINAYAGAR
Medical college and Hospital
*Kalitheerthalkuppam, Madagadipet, Puducherry- 605107*

MANA - KURAL
*The official podcast of SMVMCH*

**NAME OF RESOURCE PERSON:** DR.P.NALLAMUTHU

**PODCAST TITLE :** FIRE CRACKER INJURY TO EYE AWARENESS

**DEPARTMENT :** OPHTHALMOLOGY

**CATEGORY :** PUBLIC EDUCATION AND AWARENESS

## TRANSCRIPT

Hello Everyone This is Dr.Nallamuthu.P talking about Awareness on Fire cracker injury to Eye

**தீபாவளி பண்டிகை கொண்டாட்டத்தின் போது கண்களில் ஏற்படும் பாதிப்புகள் பற்றிய விழிப்புணர்வு:-**

தீபாவளி பண்டிகை தீபஒளி மற்றும் பட்டாசுகளின் திருவிழா. இனிப்புகள் மட்டுமின்றி பட்டாசுகள் கொண்டாட்டத்தின் மகிழ்ச்சியை இரட்டிப்பாக்குகின்றன. இருப்பினும் பட்டாசுகளை மிக கவனமுடன் கையாள வேண்டும்.
பட்டாசுகளால் கண்களுக்கு ஏற்படும் பாதிப்பு அபாயகரமானது. இவை கண்களில் கண் அழற்சி, தீக்காயங்கள் முதல் திரும்பபெற இயலாத பார்வை இழப்பு என மிகவும் மோசமான பாதிப்புகளை ஏற்படுத்தும்.
முறையான பாதுகாப்பு முன்னெச்சரிக்கைகள் மற்றும் போதிய விழிப்புணர்வு இல்லாததே முக்கிய காரணமாகும். இதனால் ஆண்டு தோறும் பெரியவர்கள் முதல் சிறுவர்கள் வரை பட்டாசு வெடிப்போர் மட்டுமின்றி அருகில் இருப்பவர்கள் என அனைவரும் பாதிப்புக்கு உள்ளாகின்றனர்.

பட்டாசுகளால் பொதுவாக கண்களில் ஏற்படும் பாதிப்புகளை பார்ப்போம்:-

- கண்இமை மற்றும் கண்களை சுற்றியுள்ள பகுதிகளில் ஏற்படும் தீக்காயங்கள்.
- கருவிழியில் ஏற்படும் காயங்கள்
- கண்விழித்திரை மற்றும் பார்வை நரம்பு பாதிப்பு
- கண்சிதைவு
- மழுங்கலான மற்றும் கூர்மையான பொருட்கள் கண்களில் படுவதால் ஏற்படும் காயம்.
- மத்தாப்பு பொறிகளால் ஏற்படும் தீக்காயம்.
- பட்டாசு துகள்கள் மற்றும் வேதிப்பொருட்கள் கண்களில் படுவதால் ஏற்படும் காயங்கள்.
- பார்வை இழப்பு

பட்டாசுகளை வெடிக்கும்போது கடைபிடிக்க வேண்டிய பாதுகாப்பு வழிமுறைகளை பார்ப்போம்:

- பாதுகாப்பு கண்ணாடி அணிந்து பட்டாசுகளை வெடிக்கவும்.
- மத்தாப்பு கம்பியை போதிய இடைவெளியில் பிடிக்கவும்.
- பெரியவர்களின் கண்காணிப்பில் சிறுவர்கள் பட்டாசுகளை வெடிக்கவேண்டும்.
- ஒருவருக்கொருவர் போதிய இடைவெளியில் பட்டாசுகளை வெடிப்பது நல்லது.
- ஒரே நேரத்தில் அதிகபட்டாசுகள் வெடிப்பதை தவிர்த்து ஒன்றொன்றாக வெடிப்பது நல்லது.
- பொதுமக்களுக்கும் போக்குவரத்திற்கும் இடையூறு இன்றி வெடிக்க வேண்டும்
- பட்டாசுகளை கைகளில் வைத்து வெடிக்ககூடாது
- வெடிக்காத பட்டாசுகளை எடுக்கவோ மறுமுறை வெடிக்கவோ முயற்சிக்க வேண்டாம்.
- பட்டாசுகளை தூக்கி எறிந்து விளையாடகூடாது.
- வான வேடிக்கைகளை அருகில் நின்று பார்ப்பதோஅதன் துகள்களை பிடிக்க முயற்சிப்பதோ கூடாது
- கண்ணாடி பாட்டில்கள் தேங்காய் மூடிகள், பைப்புகள் போன்றவற்றை உபயோகித்து பட்டாசுகளை வெடிக்ககூடாது.
- பட்டாசுகளை வெடித்து முடித்தவுடன் உடனடியாக கைகளை சோப்பு போட்டு சுத்தம் செய்யவேண்டும்
- **Contact lens** அணிந்து பட்டாசு வெடிப்பதை தவிர்க்கவும்

பட்டாசு விபத்து ஏற்பட்டால் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை பார்ப்போம்:

- கண்களை தேய்க்கவோ கசக்கவோ கூடாது
- கண்களை தூயநீரில் 10 நிமிடங்கள் கழுவவேண்டும்
- கண்ணில் பட்டாசு துகள்கள் இருந்தால் நீங்களாக எடுக்க முயற்சி செய்யக்கூடாது
- கண்மருத்துவரின் பரிந்துரை இன்றி எந்த மருந்தையும் பயன்படுத்த வேண்டாம்
- அருகில் உள்ள பொது அல்லது கண்மருத்துவமனையை காலதாமதம் இன்றி உடனே அணுகி சிகிச்சை மேற்கொள்வதன் மூலம் நிரந்தரமான பாதிப்புகளை தவிர்க்கலாம்.

இவ்வாறு போதிய விழிப்புணர்வு மற்றும் பாதுகாப்பு நெறிமுறைகளை கடைபிடித்து நமது கண்களை மட்டும் இன்றி அருகில் உள்ளவர்களின் கண்களையும் பாதுகாப்பது நமது ஒவ்வொருவரின் கடமை ஆகும்.

**தீபத்திருநாளாம் இந்த நன்நாளில் மகிழ்ச்சியுடன் விபத்தில்லா தீபாவளியை கொண்டாடுவோம்**

**பட்டாசுகளை கவனமுடன் வெடிப்போம்!**

**கண்களை பாதுகாப்போம்!**

நன்றி! வணக்கம்!

**Signature of the Resource Person**

**Signature of the HOD**

Dr. P.NALLAMUTHU, M.S.,D.O.,
Regd. No: 34734
Professor & HOD
Department of Ophthalmology
Sir Manakula Vinayagar Medical College & Hospital
Kalitheerthalkuppam, Madagadipet, Puducherry-605107.